# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண் 87/2022**

பெயர்:**கீர்த்தனா** நாள்: 23.10.2025

வா.சா.1 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – கீர்த்தனா - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 02:40

நான் 9-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 2-ம் வாதி நந்தகோபால் என்ன படித்துள்ளார் என்றால், காலேஜ் வரை படித்துள்ளார். 3-ம் வாதி கார்த்தி என்ன படித்துள்ளார் என்றால், 9-ம் வகுப்பு வரை படித்துள்ளார். இந்த வழக்கின் வழக்குரை மற்றும் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை தயார் செய்வதற்கு யார் அறிவுரை கூறினார் என்றால், நான்தான். என்னுடைய மாமனார் பெயர் குப்பன் என்றால், சரிதான். அவருக்கு தங்கவேல் என்ற சகோதரர் உள்ளார் என்றால், சரிதான். என்னுடைய மாமனார் குப்பனுக்கு எத்தனை குழந்தைகள் என்றால், 2 மகன்கள் மற்றும் 1 மகள் உள்ளனர். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் சாட்சியின் முதல் விசாரணையில் இதற்கு முன்பு வாதிகள் எங்கு குடியிருந்தார்கள் என்ற விவரம் பற்றி குறிப்பிடவில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் சாட்சியின் முதல் விசாரணையில் குடிசை அமைக்க இடம் கேட்டு அரசாங்கத்திடம் முறையிட்டேன் என்று நான் கூறியதற்கு இந்த நீதிமன்றத்தில் ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்ததாக குறிப்பிடும் ஆவணம் எத்தனாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், 6-வது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். 6-வதாக தாக்கல் செய்துள்ளதாக உள்ள ஆவணம் குடியிருக்க இடம் கேட்டு அரசாங்கத்திடம் முறையிட்டதற்கான ஆவணம் இல்லை என்றால், சரியல்ல. 4-வது ஆவணம் புகைப்படமானது எந்த போனில் எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்று நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். அந்த புகைப்படத்தை சாட்சியாக தாக்கல் செய்வதற்கு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65B ல் சான்றிதழ் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்த 4-வது ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்த

வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரத்தில் 3 அயிட்ட சொத்துக்களிலும் 3 சென்ட் மனை நிலம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனது வழக்குரையில் 16.08.2022 தேதி அன்று குடிசை வீடு இடிந்து அதற்கு பதிலாக அட்டை வீடு அமைக்க பணி மேற்கொள்ளப்பட்டது என்று நிரூபிக்க ஆவணம் ஏதும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், சரிதான். வா.சா.ஆ.5 மற்றும் 6 புகார் மனுவானது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரி பெறப்பட்ட ஆவணம் இல்லை என்றால், சரியல்ல. பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ன் நிரூபண வாக்குமூலத்தின் நகலில் வா.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணங்கள் உண்மை நகல் என்றும், ஆவணங்களை குறியீடு செய்யும்போது வா.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணங்களை அலுவலக நகல் என்று குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ல் "நாங்கள் குடியிருக்க இடமின்றி வாடகை வீட்டில் குடியிருந்து வந்தோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளேன் என்றால், சரிதான் ஆனால் வழக்குரையில் அந்த சங்கதிகளைப் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால்,சரிதான். என்னுடைய வழக்குரையில் நெடுஞ்சாலை துறை வேலையின்போது வீடு இடிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளேன் என்றால், சரிதான். ஆனால் வா.சா.ஆ.5 புகார் மனுவில் மேற்கூறிய விவரத்தை பற்றி நான் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் "வீட்டின் ஓரமாக இருந்த காலிஇடத்தில் தற்காலிகமாக அட்டை வீடு அமைத்து வசித்து வந்தோம்" என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால்,சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் "நெடுஞ்சாலை துறை கழிவு நீர் கால்வாய் அமைக்கப்பட்டது அப்போது எங்கள் வீட்டின் முன்புற பகுதி இடிக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளேன் என்றால், சரிதான். அட்டை வீடு இடிக்கப்பட்டது என்று குறிப்பாக நான் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.5 மற்றும் 6 புகார் மனுக்கள் வழக்கறிஞரின் அறிவுறுத்தலின் பேரில் தயாரிக்கப்பட்டுள்ளதா என்றால், நான் தான் தயார் செய்தேன். நான் குடியிருப்பதாக சொல்லும் அரசிராமணி கிராமத்தில் தாவா சொத்து அமைந்துள்ள என்னிடம் காட்டப்படும் புல வரைபடம் வருடம் 1986 என்றால், சரிதான். மேற்கூறிய புல வரைபடத்தின் நகல் வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையோடு பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ல் பொது தேவைக்காக 28 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.1 ல் எதிர்காலத் தேவைக்காக 6 சென்ட் நிலம்

ஒதுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். பொது தேவை மற்றும் எதிர்கால தேவைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் இருந்துதான் தாவா சொத்துக்களான மனை எண் 37,38,39 ஆகியவை வாதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். பொதுவாக மனை பிரிவுகளில் பொது தேவை மற்றும் எதிர்கால தேவைக்காக ஒதுக்கப்படும் இடங்களில் தனிநபர்களுக்கு பட்டா வழங்குவது தவறு என்றால், சரியல்ல. பொதுதேவைக்காக விடப்பட்டுள்ள நிலத்தில் சட்டவிரோதமாக வாதிகளுக்கு வழங்ககூடாது என்று பிரதிவாதிகள் மற்றும் அந்த பகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது என்றால், சரியல்ல. நெடுஞ்சாலைத்துறை பணியில் எங்கள் வீட்டின் முன்புற பகுதி இடிக்கப்பட்டது போக மீதி இடத்தில் நாங்கள் குடியிருந்து வருகிறோம் என்றால், சரியல்ல எங்களுக்கு வழங்கிய மனைப்பிரிவுகளில் குடியிருந்து வருகிறோம். எங்களுக்கு வழங்கிய மனைப்பிரிவுகளில் நாங்கள் குடியிருந்து வருவதை நிரூபிக்க நீதிமன்ற ஆணையரை நியமிக்க இந்த நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. தாவா சொத்து இன்று வரை காலிநிலமாக உள்ளது என்றும் அங்குள்ள பகுதி மக்கள் அதனை பயன்படுத்தி வருகிறார்கள் என்றும் நீதிமன்ற ஆணையரை நியமித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் இடைக்கால மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. எங்களுக்கு வழங்கிய மனைப்பிரிவுகளில் வீடு கட்டுவதற்காக அரசிராமணி பேரூராட்சியில் அனுமதி பெற்றுள்ளோமா என்றால், இல்லை. வாதிகள் உட்பட என்னுடைய குடும்பத்தில் அனைவருக்கும் வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் வழங்குதற்கு முன்பாகவே தனித்தனியாக தாவா சொத்துக்களைத் தவிர்த்து வேறு சொத்துக்கள் உள்ளது என்றால், இல்லை. எங்களுக்கு பட்டா வழங்கியதை எதிர்த்து 2-ம் பிரதிவாதி செங்கோடன் ஆட்சேபனை மனு தாக்கல் செய்து என்னிடம் காட்டப்படும் கொடுக்கப்பட்ட பதில் என்றால், சரிதான் மேற்கூறிய கொடுக்கப்பட்ட பதிலின் நகல் வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையோடு பி.வா.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2 ல் "அரசிராமணி பிட் 1 கிராமத்தில் சர்வே எண்.98/2 ஏ ல் புதிதாக வழங்கப்பட்ட மூன்று மனை பட்டாகளிலும் பயனாளிகள் வீடு கட்டவில்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். நெடுஞ்சாலைத்துறை பணியின்போது எங்கள் வீட்டின் முன்புறபகுதி இடிக்கப்பட்டு மீதியுள்ள வீட்டின் முகவரிதான் 3 வாதிகளின் ஆதார் உள்ளிட்ட ஆவணங்களில் உள்ளது என்றால், சரிதான். தாவா சொத்து குறிப்பிடப்பட்டுள்ள 3 அயிட்ட சொத்துக்களுக்கும் வாதிகள்தான் உரிமையாளர்கள் என்று விளம்புகை

பரிகாரம் இந்த வழக்கில் கோரியுள்ளேனா என்றால், இல்லை.அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. பட்டா பாஸ் புக் சட்டத்தின்படி எங்களுக்கு வழங்கிய பட்டாக்கள் செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல. தாவா சொத்துக்களில் இன்று வரை நாங்கள் குடியிருக்கவில்லை என்றும் பிரதிவாதிகள் மற்றும் ஊர் மக்களின் பொது பயன்பாட்டில் தாவா சொத்து உள்ளது என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் வழக்கு மூலம் பொய் என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணங்கள் பின்னிட்டு தயாரிக்கப்பட்டவை என்பதால் அவை செல்லத்தக்கது அல்ல என்றால், சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டியது என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 3:55</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.10.23 13:12:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.